**செய்தி வெளியீடு: 396** **நாள்: 17.5.2010**

# மத்திய, மாநில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை ஏற்று பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 53 பேரின் குடும்பங்கள் காயமடைந்த 9 பேர் – சேதமடைந்த 16 வீடுகள் ஆகியவற்றிற்கு மொத்தம் 30 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழக பொது மக்களில் சாலை விபத்துகளால் உயிரிழந்தவர்கள், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலியானவர்கள் விபத்து நிவாரண நிதியுதவி வழங்கிடக் கோரி மத்திய, மாநில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பரிந்துரைகளுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கும், தனிப்பிரிவிற்கும் வரப்பெற்ற மனுக்களின் மீது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளைப் பெற்று அந்த அறிக்கைகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 30 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் விவரம்:

**மத்திய உள்துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களின் பரிந்துரையை ஏற்று,** வாகன விபத்தில் உயிரிழந்த, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு பிரசாந்த், இரண்டரை வயதுடைய மகள் ஷாலினி ஆகிய இருவருக்காகவும் அவர்களுடைய வாரிசுதாரர் திருமதி மரகதவள்ளிக்கு ஒரு இலட்சம் ரூபாய்;

**கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களின்** கோரிக்கையை ஏற்று, ஆற்றில் மூழ்கி உயிரிழந்த, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் திருநரையூர் கிராமத்தைச் சேர்ந்த நவீன்குமார், பிரவீன் குமார், சரவணன் ஆகிய மூவருக்காகவும் அவர்களுடைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்;

**மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களின் கோரிக்கையை ஏற்று,** குளத்தில் தவறி விழுந்து உயிரிழந்த, கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், தோப்புக் கொல்லை கிராமத்தைச் சேர்ந்த 5 வயதுடைய கோ. குரு என்னும் சிறுவனின் தந்தை திரு. கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**வணிகவரித் துறை அமைச்சர் திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா** பரிந்துரையை ஏற்று, ஏரியில் மூழ்கி உயிரிழந்த, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், அண்டக்குடி கிராமத்தைச் சேர்ந்த அழகேசன் என்கிற திருமலைச் செல்வன் என்பவரின் தந்தையார் வெங்கடாஜலபதிக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே. பி. பி. சாமி அளித்த கோரிக்கையினை ஏற்று,** திருவள்ளூர் மாவட்டம், மணலியைச் சேர்ந்த ஏ.வரதன், கேபிள் புதைக்கும் வேலை செய்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்ததால், அவரது மனைவி திருமதி கனகவள்ளிக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே. ஆர். பெரியகருப்பன் அவர்கள் அளித்த 2 கோரிக்கைகளின்படி,** சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது தண்ணீர் லாரி மோதி உயிரிழந்த காஞ்சிபுரம் மாவட்டம், நன்மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. எஸ்.ப்பி. செல்வராஜ் என்பவரின் 12 வயது மகன் பீரவீன்குமாருக்காக அவரது தந்தைக்கு 50 ஆயிரம் ரூபாய்;

அவரது மற்றொரு கோரிக்கையின்படி, மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ராஜேந்திரன், கார்த்திக்ராஜா ஆகியோருக்காக அவர்களின் வாரிசுதாரரான திருமதி செல்வி என்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாய்;

**வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்களின் பரிந்துரையை ஏற்று,** கன்னிவாடி நாயோடை அணைக்கட்டில் குளிக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்த, திண்டுக்கல் மாவட்டம், சிரங்காடு கிராமம் ரெட்டியார்பட்டியைச் சேர்ந்த திரு. மோகனசுந்தரம் என்பவரின் 12 வயது மகன் முத்துச்சாமி; திரு. கண்ணன் என்பவரது 12 வயது மகன் அரவிந்த குமார் ஆகியோருக்காக அவர்களது குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய்;

**வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்களின் கோரிக்கையினை ஏற்று.** விளையாடிக் கொண்டிருந்த போது கோவில் குளத்தில் தவறி விழுந்து மூழ்கி உயிரிழந்த திரு.முரளி என்பவரது 11 வயது மகன் அரவிந்த் என்கிற அப்பு, திரு. ஜானகிராமன் என்பவரின் 8 வயது மகன் சந்தோஷ் குமார் ஆகிய இருவரது குடும்பங்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய்;

**சென்னை புரசைவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு** அவர்களின் கோரிக்கையை ஏற்று, மெரினா கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தபோது கடல் அலையில் சிக்கி உயிரிழந்த, வியாசர்பாடியைச் சேர்ந்த வெண்ணிலாவுக்காக அவரது தந்தையார் குமாருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.எம். பழனிசாமி மற்றும் காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் அளித்த** கோரிக்கையை ஏற்று, ஈரோடு மாவட்டம் கிருஷ்ணம்பாளையம் ரோடு, கருங்கல்பாளையத்தைச் சேர்ந்த விக்னேஷ் என்னும் 13 வயது சிறுவனை காவிரி வெள்ளத்திலிருந்து காப்பாற்றியபோது உயிரிழந்த குமார் என்பவருக்காக அவரது மனைவி திருமதி கலைவாணிக்கு ஒரு இலட்சம் ரூபாய்;

**நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். பன்னீர் செல்வம் அவர்கள் அளித்த மூன்று கோரிக்கைகளையும் ஏற்று,** லாரி மோதி உயிரிழந்த செல்வராஜ் என்பவருக்காக அவரது மனைவி திருமதி தையல்நாயகிக்கு 50 ஆயிரம் ரூபாய்;

ஆற்றில் மூழ்கி உயிரிழந்த நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வேம்படி திடீர்குப்பத்தைச் சேர்ந்த 6 வயது சிறுவன் மேகநாதன், 5 வயது சிறுவன் மதியழகன் ஆகியோர்க்காக அவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய்;

கூரை வீட்டின் மீது வேன் மோதி சுவர் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்த நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி வினாயக்குடி மெயின் ரோட்டைச் சேர்ந்த

சிறுமி ராஜஸ்ரீ என்பவரின் தந்தை திரு. நட்பரசன் அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய்; அவ்விபத்தில் காயமடைந்த திரு. சிவலிங்கம், திருமதி செண்பகவள்ளி, நட்பரசன், திருமதி உமா ஆகிய நான்கு பேருக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 40 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 90 ஆயிரம் ரூபாய்;

**வேலூர் மாவட்டம் சோளிங்கர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அருள் அன்பரசு** அவர்கள் அளித்த இரண்டு கோரிக்கைகளையும் ஏற்று, வேலூர் மாவட்டம், சோளிங்கர், கீரைசாத்து கிராமத்தைச் சேர்ந்த 7 வயதுடைய சிறுவன் அய்யப்பன் பாம்பு கடித்து உயிரிழந்ததால் அவரது தந்தையார் திரு. முருகேசனுக்கு 50 ஆயிரம் ரூபாய்;

வேலூர் மாவட்டம் ஐயப்பேடு கிராமக் குளத்தில் குளிக்கும்போது மூழ்கி உயிரிழந்த கோட்டிஸ்வரன் (என்கிற) மணிகண்டன், மூர்த்தி, சதீஷ் ஆகிய மூன்று சிறுவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்;

**காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் அளித்த கோரிக்கையை ஏற்று,** நெரும்பூர் ஆதி திராவிட நலத்துறை பள்ளி மாணவி அஸ்வினி தீயிட்டு உயிரிழந்தமைக்காக அச்சிறுமியின் பெற்றோர்க்கு 50 ஆயிரம் ரூபாய்;

**சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வை. காவேரி** அளித்த கோரிக்கையை ஏற்று, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆவணிப்பேரூர் மேல்முகம் கிராமம் கொத்தபாளையம் மேட்டுத் தெருவில் வசித்து வந்த செந்தில்குமார் (வயது 32), அவரது மனைவி சாந்தி (வயது 26) மகன் அருள்குமார் (வயது 5) ஆகிய மூவரும் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டு மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதால் அக்குடும்பத்தைச் சேர்ந்த 2 வயது குழந்தை நந்தகுமார் தந்தை வழி பாட்டி திருமதி. மணி என்பவரது பராமரிப்பில் உள்ளதையொட்டி, அக்குழந்தையின் பராமரிப்புக்காக அவரது பாட்டி திருமதி மணி என்பவருக்கு ஒரு இலட்சத்து
50 ஆயிரம் ரூபாய்;

**கிருஷ்ணகிரி மாவட்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்** அளித்த கோரிக்கையை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், ராமாபுரம் கிராமத்தில் வசித்து வரும் திரு. மாரி கவுண்டர் என்பவரின் மகன் பெருமாள் ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்ததால் அவரது மனைவி திருமதி ஜெயந்திக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எம். கே. விஷ்ணுபிரசாத் அளித்த கோரிக்கையை ஏற்று,** மேற்படி கிராமத்தைச் சேர்ந்த திரு. பரமசிவம் என்பவரின் மகன் சாரங்கன் பந்து விளையாடிக் கொண்டிருந்தபோது பாம்பு கடித்து உயிரிழந்ததால் அச்சிறுவனின் தந்தை திரு.பரமசிவம் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**வேலூர் மாவட்டம் வாணியம்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். அப்துல் பஷீத்** அளித்த கோரிக்கையை ஏற்று, வேலூர் மாவட்டம் ஆம்பூரைச் சேர்ந்த ராஜபாண்டியன், விக்னேஷ் ஆகிய இருவரும் குட்டையில் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்ததால் அவர்களின் குடும்பங்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய்;

**கடலூர் மாவட்டம் மங்களூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. செல்வம் (எ) செல்வப் பெருந்தகை** அளித்த கோரிக்கையை ஏற்று, திரு. என். ஜெகநாதன் என்பவரின் மகன் சுசில்குமார் பாம்பு கடித்து உயிரிழந்ததால் அச்சிறுவனின் தந்தைக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**பெரம்பலூர் மாவட்டம் வரகூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி** அளித்த கோரிக்கையை ஏற்று, பெரம்பலூர் குன்னம் வட்டம் பெருமத்தூர் (வடக்கு) மஜுரா நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுவன் சரவணகுமார், 13 வயதுடைய சிறுவன் மணிகண்டன் ஆகிய இருவரும் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்த போது குட்டையில் தவறி விழுந்து உயிரிழந்ததால் அச்சிறுவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய்;

**பட்டுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன் அளித்த கோரிக்கையை ஏற்று,** தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், பெரிய நாயகிபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு எஸ்.பி. சுந்தர் என்பவரின் 8 வயது மகள் பிரியங்கா, பள்ளிக்குச் சென்ற வேன் கவிழ்ந்து உயிரிழந்ததால் அச்சிறுமியின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய்;

**விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ஆ. அங்கையற்கண்ணி அளித்த கோரிக்கையை ஏற்று,** விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், இலக்கி நாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மாலிக் பாட்சா என்பவர் மலேசியாவில் பணிபுரிந்து வந்த தையல் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்ததால் அவரது மனைவி திருமதி. எம். ரஜியா என்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாய்;

**உடுமலைப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அளித்த கோரிக்கையை ஏற்று,** திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம் தேவனூர்புதூரைச் சேர்ந்த திருஞானசண்முகம் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது மயில் பறவை குறுக்கே பறந்து வந்து மோதியதில் நிலை தடுமாறி வாகனத்திலிருந்து கீழே விழுந்து உயிரிழந்ததால் அவரது மனைவி திருமதி டி. ஜோதிமணிக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சா. பீட்டர் அல்போன்ஸ், சங்கரன்கோவில் தொகுதி முன்னாள் மாவட்ட கவுன்சிலர் திரு எம். மனோகர் ஆகியோர்** அளித்த பரிந்துரையை ஏற்று, திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம், தேவர்குளம் கிராமத்தில் வசித்து வந்த ஆர். கவாஸ்கர் மற்றும் அதே ஊரைச் சேர்ந்த விஸ்வநாத் ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது லாரி மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததால் அவ்விருவரின் குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய்;

**கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆர். லீமா ரோஸ் அளித்த கோரிக்கையை ஏற்று,** கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், தும்பகோடு கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் குளிக்க சென்ற போது ஆற்றில் மூழ்கி உயிரிழந்ததால், அவரது மனைவி திருமதி தங்கம் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

**கோயமுத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. பா. அருண்குமார்** அளித்த கோரிக்கையை ஏற்று மேட்டுப்பாளையம் நகரம், மகாதேவபுரத்தைச் சேர்ந்த ஆர். தேவராஜ் மற்றும் அவரது இரண்டு குழந்தைகள்

**உட்பட மூவரும் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தபோது எதிரில் வந்த லாரி மோதி மூவரும் உயிரிழந்ததால், அவர்கள் மூவருக்காகவும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம், உயிரிழந்த தேவராஜ் என்பவரின் மனைவி திருமதி டி. வசந்தி என்பவர்க்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்;**

**திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அளித்த கோரிக்கையை ஏற்று, திண்டுக்கல் தெற்கு ரத வீதியில் பட்டாசு குடோனில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த கடையின் உரிமையாளர் தனசேகரன் குடும்பத்தாருக்கு ரூ.50 ஆயிரம் ரூபாய்;**

**அத்தீவிபத்தில் காயமடைந்த திரு.நாராயணன், திருமதி பாப்பாத்தி, செல்வி பிரியதர்சனி, செல்வி. விஜயலட்சுமி, திருமதி பார்வதியம்மாள் ஆகிய ஐந்து பேருக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 50 ஆயிரம் ரூபாய்;**

**அத்தீவிபத்தில் வீடுகளும், கடைகளும் சேதமடைந்த 16 குடும்பங்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்;**

**திருவள்ளூர், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரையை ஏற்று, காரைக்காலில் ஏற்பட்ட வாகன விபத்தில் உயிரிழந்த, திருவள்ளூர் மாவட்டம் எர்ணாவூர் கிராமத்தைச் சேர்ந்த முத்தையா, அவரது மகள் சபிதா, மகன் சரண் அவரது மாமியார் செண்பகவள்ளி மற்றும் வாகன ஓட்டுநர் வேல்முருகன் ஆகிய ஐவரும் உயிரிழந்ததால், உயிரிழந்த ஒவ்வொருவருக்காகவும் அவர்களின் குடும்பத்திற்குத் தலா 50 ஆயிரம் வீதம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்,**

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில்** மாதவரம் வட்டம், திருவொற்றியூர், எர்ணாவூர் சுனாமி குடியிருப்பைச் சேர்ந்த திரு. அன்பு – சராளா தம்பதியரின் 8 வயது மகள் அஸ்வினி விளையாடிக் கொண்டிருந்தபோது பள்ளிக் கட்டிட சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்ததால், அச்சிறுமியின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய்;

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரையின் பேரில்** மயிலாடுதுறை வட்டம் காளி கிராமம் பெருமாள் கோயில் தெருவில் வசித்து வரும் திரு. காந்தி என்பவரின் 6 வயது மகன் குபேந்திரன் பாம்புக் கடித்து உயிரிழந்ததால், அச்சிறுவனின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய்;

– என பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 53 பேரின் குடும்பங்களுக்கும், காயமடைந்த 9 பேருக்கும், பட்டாசுத் தீவிபத்தினால் சேதமடைந்த 16 வீடுகள் மற்றும் கடைகளுக்குமாக மொத்தம் 30 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (17.5.2010) ஆணையிட்டுள்ளார்.

*********

வெளியீடு: இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்புத் துறை,

தலைமைச் செயலகம், சென்னை–9.